புதுமலர்: 13 இதழ்: 03 வைகாசி - ஆனி

# அனல்

01.05.2016

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்: கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## நிதானமான நினைப்புக்கள் வேண்டும் கிறிஸ்தவனுக்கு...

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- மகிழ்ச்சியான வாழ்க்கை
- வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 06
- நீரே என் பங்கு
- பெண்கள் பக்கம் - மனப்பூர்வமுள்ள ஸ்திரி
- வினா விடை - 75
- நற்செய்திப் பகுதி - ஆண்டவரே எனக்கு என்ன தருவீர்?
- பக்தர்களின் பயிலகம் - 14
- குறுக்கெழுத்துப் போட்டி - 73
- செய்யக்கூடாததை...
- அருட்பணியாளர் சரிதை - சந்தியாகு, கிளாரா ஸ்வைன்
- அனலின் ஆன்மீக விருந்து - நிதானமான நினைப்புக்கள் வேண்டும் கிறிஸ்தவனுக்கு


**ஜெப வேண்டுதல்**

வியாதியினாலும், தேவைகளினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.





எழுத வேண்டிய முகவரி:



**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:




ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*



**திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -**

# அனலின் குரல்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

மீண்டும் வைகாசி – ஆனி மாத இதழினூடாக உங்களை சந்திக்க ஆண்டவர் கிருபை அருளியிருக்கிறார். இவ்வாண்டின் கடந்த இரண்டு அனலின் மூலமாக நீங்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

இயேசு கிறிஸ்துவுக்குள்ளானவர்களுக்கு கிடைக்கும் மெய்யான வாழ்வை வாழ உங்களை அர்ப்பணித்துவிட்டீர்களா? கிறிஸ்துவுக்குள் உண்மையான விடுதலையுண்டு. இயேசு சொன்னார்: **"பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை யென்று"** இந்த அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை பெறுவதே இயேசு தரும் விடுதலை. இந்த விடுதலைக்குரிய கிரயத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரியில் சிலுவையில் செலுத்தி தீர்த்துவிட்டார். இயேசு கிறிஸ்துவை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும் போது இந்த விடுதலை உங்களுக்கு சொந்தமாக வரும்.



**ரோமர் 6:22 சொல்கிறது: "இப்பொழுது நீங்கள் பாவத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் முடிவோ நித்திய ஜீவன்.**

**ரோமர் 6:23 "பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்.**

– ஆசிரியர் –






வை. விமலதாஸ்

ஒரு விஞ்ஞான பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவருடைய வகுப்பில் கல்வி கற்ற பிள்ளைகளில் இரண்டுபேர் மிகவும் திறமைசாலிகளாகவும், கெட்டிக்காரர்களாகவும் இருந்தார்கள். எனவே அவர்களுக்குரிய இறுதி பரீட்சையில் அவர்கள் இருவரும் ஒரே பெறுபேற்றினைப் பெற்றமையால் அவர்களில் யார் முதலிடம் பெறுகின்றார் என்பதனை கணிப்பதற்காக அவர்களுக்கு ஒரு செயல்முறைப் பரீட்சை ஒன்றை வைக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். எனவே அவர்களை அழைத்த அந்த பேராசிரியர்: நீங்கள் இருவரும் மிகவும் கெட்டிக்காரர்களாக இருக்கின்றீர்கள், அத்துடன் இருவரும் நடைபெற்ற பரீட்சையில் சமமான புள்ளிகளைப் பெற்றிருக்கின்றீர்கள். எனவே உங்களில் யார் முதலிடம் என்பதை தெரிவு செய்வதற்காக இந்த பரீட்சையை உங்களுக்கு வைக்கின்றேன் என்றார்.

பின்னர் அவர்களில் ஒருவரிடம் பக்கத்து ஊரில் உள்ள ஒரு மரத்தைக் குறிப்பிட்டு, அந்த மரம் அந்த ஊரில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது, மாத்திரமல்ல அது மிகவும் பெரிய சிறந்த மரம், எனவே அந்த மரத்தைக் குறித்த கட்டுரை ஒன்றை எழுதித் தரவேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தார். அவனும் அவ்வாறே அந்த ஊருக்குச் சென்று, அந்த மரத்தைப் பார்த்து, அதனைக் குறித்து அங்கே இருந்தவர்களிடம் விசாரித்து தகவல்களைச் சேகரித்து, அழகிய கட்டுரை ஒன்றை எழுதிக் கொண்டு வந்து அந்த பேராசிரியரிடம் கொடுத்தான்.

அதற்கடுத்து மற்றைய மாணவனை அழைத்துச் சொன்னார், நீ ஒரு சில மாதங்கள் காத்திரு. அதன் பின் உனக்குரிய செயல்முறைப் பரீட்சையைக் கூறுவேன் என்றார். அவ்வாறே நாட்கள், வாரங்களாய், வாரங்கள் மாதங்களாய் உருண்டோடி, ஒரு சில மாதங்கள் கடந்து விட்டது. இப்போது அந்த மாணவனை அழைத்து, நீ அதே ஊருக்குச் சென்று, முதல் மாணவன், செய்ததைப் போன்றே அதே மரத்தைப் பார்த்து, அந்த மரத்தைக் குறித்த கட்டுரை ஒன்றை எழுதிக் கொண்டுவா என்று அனுப்பி வைத்தார். அவ்வாறே அந்த மாணவனும் அந்த ஊருக்குச் சென்று அந்த மரத்தைக் குறித்த கட்டுரையை எழுதிக் கொண்டு வந்து அந்த பேராசிரியரிடம் கொடுத்தான்.

எனவே அந்த பேராசிரியர் இவர்கள் இருவரும் எழுதிக் கொண்டு வந்திருந்த அந்த கட்டுரைகளை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அக் கட்டுரைகளில் முதலில் சென்ற மாணவன் எழுதியிருந்தான்: அந்த மரம் மிகவும் அழகாயிருந்தது, அந்த மரத்தைப் பார்த்த போது அது மிகவும் பச்சை நிறத்துடன், அந்த இலைகளெல்லாம் மிகவும் செழிப்பாக, குளிர்மையாக இருந்தது. அந்த மரம் மிகவும் கெம்பீரமாக நிமிர்ந்து நின்றது, அதில் இருந்த பழங்களெல்லாம் மிகவும் அழகாகவும், சுவையாகவும் இருந்தது என்று அந்த மரத்தைக் குறித்து மிகவும் நன்றாக எழுதியிருந்தான். மாத்திரமல்ல, தான் பார்த்ததிலேயே இந்த மரம் தான் மிகவும் அழகாக இருக்கின்றது, இதனைப் போன்று வெறொரு மரம் இந்த உலகிலேயே இருக்காது என்று மிகவும் புகழ்ந்து எழுதியிருந்தான்.

அடுத்து, இரண்டாவதாக சென்ற மாணவனின் கட்டுரையை எடுத்து அந்த பேராசிரியர் வாசிக்க ஆரம்பித்தார். அவன் தனது கட்டுரையில் இவ்வாறு எழுதியிருந்தான்: நான் இதுவரை பார்த்ததிலேயே மிகவும் கேவலமாக இருந்த மரம் என்றால் அது இந்த மரம் தான். அது மிகவும் வாடிப்போய், காய்ந்து இருந்தது, இலைகள் எதுவுமற்று, காய்களோ, கனிகளோ இன்றி மிகவும் பரிதாபமாக இருந்தது என்று மிகவும் கேவலமாக தனது கட்டுரையில் எழுதியிருந்தான்.

உடனே அந்த பேராசிரியர், வகுப்பில் இருந்த மாணவர்களைப் பார்த்து கூறினார்: இவர்கள் இருவரும் எழுதிக் கொண்டு வந்திருக்கும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மரம் இரண்டும் ஒரே மரம் தான். ஒரே மரத்தைப் பார்த்த இருவரும் வெவ்வேறு கோணங்களில் தங்களது கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்கள். ஒருவர் தனது கட்டுரையில் இந்த மரம் தான் மிகவும் சிறந்த மரம் என்றும், மற்றவர் இந்த மரம் தான் மிகவும கேவலமான மரம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். எனவே எப்படி இருவரும் அந்த ஒரே மரத்தைக் குறித்து வெவ்வேறு கோணங்களில் கட்டுரை எழுதியிருக்க முடியும் என்று கேட்டார். அதற்கு அவர்கள் யாரும் எதுவும் கூறாமல் மௌனமாக இருநதார்கள்.

அப்போது அந்த பேராசிரியரே அதற்குரிய விடையையும் கூறினார். அதாவது இருவரும் ஒரே ஊரில் இருந்த ஒரே மரத்தைத் தான் சென்று பார்த்தார்கள். ஆனால் அங்கே முதலாவதாக சென்றவர் சென்ற காலப்பகுதியைப் பார்த்தால், அது வசந்த காலமாக இருந்தது. அந்த காலத்தில் தான் மழை நன்றாக பொழிந்து, மரங்களெல்லாம் நன்றாக செழித்து வளர்ந்து, கனி கொடுக்கின்ற காலமாக இருந்தது. எனவே அந்த காலத்தில் சென்றமையால் அந்த மரம் மிகவும் செழிப்பாக இருந்திருக்கும், அதன் இலைகளெல்லாம் பச்சைப் பசேலென்று இருந்திருக்கும், அதனால் தான் அந்த காலப்பகுதியில் அந்த மரத்தைப் பார்த்தால், அது மிகவும் அழகாக, செழித்து கெம்பீரமாக இருந்திருக்கும், அதன் பழங்கள் எல்லாம் மிகவும் அருமையாக இருந்திருக்கும். ஆனால் இரண்டாவதாக சென்ற மாணவன் சென்ற காலப்பகுதியைப் பார்த்தால், அது மிகுந்த கோடைகாலமாகவும், இலையுதிர் காலமாகவும் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் அந்த மரத்தில் இலைகள் விழுகின்ற காலமாக இருந்தது. எனவே அந்த மரத்தில் இலைகள் எதுவும் இருந்திருக்காது, பழங்கள் இருந்திருக்காது. அந்த காலப்பகுதியில் அந்த மரத்தைப் பார்த்தால் அது மிகவும் கேவலமாக, வாடிப்போய் இருந்திருக்கும். ஆகவே இவர்கள் இருவரும் ஒரே மரத்தைத் தான் பார்த்தார்கள், ஆனால் இருவரும் வெவ்வேறு காலப்பகுதியில் அந்த மரத்தைப் பார்த்தார்கள். அதனால் தான் அந்த மரம் இவர்கள் இருவருக்கும் வெவ்வேறு விதத்தில் காட்சியளித்தது என்று விளக்கம் சொன்னார்.

ஆம் நண்பர்களே! எமது வாழ்க்கையும் இன்றைக்கு இப்படித் தான் இருக்கின்றது. எமது வாழ்க்கையிலும் சிலவேளை வெவ்வேறான காலப்பகுதிகளைக் காண்கின்றோம். சில வேளை எமது வாழ்க்கை, மிகவும் இனிமையாக, சந்தோஷமாக இருக்கும். எல்லோரும் பாராட்டும்படியாக வாழ்க்கை சென்று கொண்டிருக்கும். ஆனால் சில காலகட்டங்களில் மிகவும் துன்பமாகவும், பிரச்சனைகளாகவும் இருக்கும், மற்றவர்கள் குறை சொல்லக்கூடியதைப் போன்று இருக்கும். சந்தோஷமாக இருக்கும் போது எல்லோருடனும் மிகவும் சந்தோஷமாய் இருப்போம்: ஆனால் துக்கம் வந்தவுடன் நாம் மிகவும் சோர்வாக மாறிவிடுவோம், யாருடன் பேசமாட்டோம், துக்கமாக இருப்போம். வாழ்க்கையில் எமக்கு பாடுகள், பிரச்சனைகள் உண்டு தான் ஆனால் இயேசு சொன்னார்: **யோவான் 16:33 உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்: நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்.** அந்த நம்பிக்கையோடு மகிழ்ச்சியான வாழ்க்கையாக மாற்றிக்கொள்வோம்.

“ *அழகிய நீரோடையில் எப்பொழுது தண்ணீர் ஓடுவது தடைபடுகின்றதோ அப்போது அது நாற்றமடைய ஆரம்பிக்கும்: ஓடிக்கொண்டிருந்தால் ஒரு போதும் நாற்றமடையாது. அதே போன்று எமது வாழ்வும் எக் காரியங்களாலும் தடைபடாமல் ஓடட்டும்...* ”




## வாலிபர் வளாகம்

போதகர் வேதநாயகம் சுமணன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாலிப உள்ளங்களுக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# இப்பொழுதே தேவனுடைய வேளை

**தேவன் படைத்த வாலிப காலத்திலே**

**அனைத்து உலக மனிதர்களே**

**உலகத்தின் நாடுகளே தேவனைச்**

**சந்திக்க ஆயத்தப்படு.**

மிகவும் முக்கியமான அந்த ஆயத்தத்திற்காக முழு இருதயத்தோடும் கவனம் செலுத்து. **நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.** யாருமே தப்ப முடியாது. அந்தப் பெரிய நாளில் ஒருவருக்காக ஒருவர் பேசமுடியாது.

**ரோமர் 14:12 ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.**

சரீரத்தில் செய்தவைகளுக்காக கணக்கு ஒப்புவிக்க ஆயத்தமா? **11கொரிந்தியர் 5:10.** தேவ குமாரனாகிய கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார் - **கொலோசெயர் 1:13-18, எபேசியர் 5:23-24.** நாம் ஆயத்தமாயிருக்கும்படி நம்மை அழைக்கின்ற இவ் வசனங்கள் ஆண்டவரை சந்திக்க ஆயத்தமா?

---

**மத்தேயு 24:44 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்: ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.** மரணம் உறுதியானது. கர்த்தரின் வருகையில் மறுரூபமடைபவர்களைத் தவிர அனைவரும் மரணமடைவது நிச்சயம். **1தெசலோனிக்கேயர் 4:13-18** இதைக் குறித்து சற்று சிந்திப்பாயா வாலிபனே. கன்னியரே. **ஆமோஸ் 4:12 உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.** என்று தேவனே கட்டளை கொடுக்கிறார்.

---

## இப்பொழுதே உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு

சமயத்தை வீணடிக்காதீர் தம்பி! தங்கையரே! எல்லாவற்றையும் உதறிவிட்டு, **ஏசாயா 55:6 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்: அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.** காலதாமதம் பண்ணாமல் ஆண்டவரைத் தேட வேண்டும். இது தேவனுடைய வேளை. **11கொரிந்தியர் 6:2 இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்.**

---

**11நாளாகமம் 15:2 நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்: நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்: அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.** உனது உள்ளத்தின் விருப்பத்தை தேவன் எதிர்பார்க்கிறார்.

---

## தேவையானது ஒன்றே

இன்று உன் வாழ்வின் தேவைகள் பல காணப்படினும் (இருப்பினும்) மெய்யாகவே உன்னுடைய வாழ்வுக்கு தேவையான மிகமுக்கியமான ஒன்று மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசு: அவள் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று மெச்சிக் கொண்டார். ஆண்டவர் உன் வாழ்வில் நல்ல பங்கை தெரிந்து கொள்ள உதவி செய்வாராக.

---

இன்றே தீர்மானித்துக் கொள்! சரியானதும் போதுமானதும் நித்தியம் வரைக்கும் நடத்தக் கூடியதுமான அந்த தேவ வார்த்தையாகிய நல்ல பங்கை தெரிந்து அதன்படி நடக்க.

## வருத்தப்பட்டு பாரம் சுமந்தவர்களுக்கு இளைப்பாறுதல்

*ஆண்டவர் இயேசு எல்லாரையும் அழைக்கின்றார். உன் இளமையிலே பலவிதமான பாரங்களினால் களைத்துப் போயுள் ளாயோ? நேசர் இயேசு உன்னை அழைக்கிறார். வேலையின்பாரம், குடும்ப கஷ்டத்தின் பாரம், இல்லாமையின் பாரம்... எப்படிப் பட்ட வருத்தமான நிலையில் இருந்தாலும் உன் வாழ்வில் இளைப்பாறுதல்தர இரட்சகர் காத்து நிற்கிறார்.*

---

**மத்தேயு 11:28 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

---

## ஆத்தும ஆதாயத்திற்காக

*ஆத்துமாக்களைப் பாவத்திலிருந்தும் அதன் பலனாகிய நித்திய அழிவிலிருந்தும் விடுவிப்பது எத்தனை முக்கியமானது.* **இதற்கு காலம் குறைந்துவிட்டதாக தேவன் அங்கலாய்க்கிறார்.** *எழும்புவாயா தம்பி! தங்கையரே! நீ ஆண்டவருக்குத் தேவை.*

*உன் கரங்களை அவர் தம் பணி செய்ய அர்ப்பணிப்பாயா. அவரின் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறாய்.* **இதை வாசிக்கும் நீ ஆண்டவருக்குத் தேவை! தேவை!!** *உன் இருதயத்தில் அவரின் மனதின் விருப்பம் பாய்ந்து ஓட அனுமதிப்பாயா? அல்லத் தட்டாதே! சாட்டுப்போக்குகளைச் சொல்லாதே! இப்பொழுதே தேவனுடைய வேளை (God's Time is Now)*

---

தேவனுடைய பார்வையில் ஒரு ஆத்துமா மிகவும் விலையேறப்பெற்றது. ஒரு ஆத்துமா நித்தியமான அழிவுக்கு நேராக செல்வது வேதனைக்குரியது. இரட்சிக்கப்பட்ட ஆத்துமா அடையும் சந்தோஷமும், மகிமையும் எவ்வளவோ பெரியது. எனவே ஆத்தும ஆதாயம் ஓர் சிறந்த பணி. இது எல்லோருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான காலமோ குறுகியது.

---

*முதலாவது நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும். பின்பு இந்த மகிமையான பணியில் ஈடுபடுவாயா?*

**ஜெபிக்கலாமா?**

அன்பின் ஆண்டவரே உம்முடைய வேளை இதுவே என்று நான் புரிந்து கொண்டு உம்மை சந்திக்கவும், நல்ல பங்கை தெரிந்து கொள்ளவும் ஆத்துமா ஆதாய பணியில் என்னை சந்தோஷமாகவும் தைரியமாகவும் ஈடுபட கிருபை தாரும். - ஆமென் -



# நீரே என் பங்கு!

ரேமா

**கர்த்தாவே, நீரே என் பங்கு: நான் உமது வசனங்களைக் கைக்கொள்ளுவேன் - சங்கீதம் 119:57**

முழு இருதயத்தோடும் தேவதயவுக்காய் கெஞ்சுங்கள், இரங்கும்படியாக தேவனை நோக்கி கேளுங்கள். எல்லாரையும் இயேசு நேசிக்கிறார். பாவிகளை மீட்கும்படியாகவே தன்னை சிலுவையில் உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்தார். **உன் வழிகளைச் சிந்தித்துப்பார். கால்களை தேவ வசனத்திற்கு திருப்புவாயா? ஆண்டவரின் கற்பனைகளை முழுமனதுடன் கைக்கொள். துன்மார்க்கரின் கூட்டத்தில் உட்காராதே.** கர்த்தரின் வேதத்தில் பிரியமாயிருந்து, தியானமாயிருப்பாயானால் அவருடைய கிருபையினால் நீ தேவாதி தேவனைப் பார்த்து சொல்லக்கூடும்: கர்த்தாவே நீரே என்பங்கு என்று.

**ஆண்டவரே உனக்கு எல்லாமாய் இருப்பாராக.**

---

**செப்பனியா 3:15b**

**இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்:**

**இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**



# மனப்பூர்வமுள்ள ஸ்திரீ

திருமதி. J.பிலிப்




சாவித்திரி ஓர் ஏழை இளம் விதவை. அவளுக்கு மூன்று ஆண் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களை எப்படியாவது நன்றாக படிப்பிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டவள். அவள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவள் இருக்கும் கிராமத்தின் தோட்ட வேலைகளுக்கு சென்று தனக்கு வேண்டிய வருமானத்தை தானே தேடிக்கொள்வாள். ஒருநாள் காலையில் சாவித்திரி எழுந்து பார்த்தாள். வீட்டிலே சிறிதளவு மாவு மட்டும் இருந்தது. அதனைக் கொண்டு எப்படியாவது தன்னுடைய பிள்ளைகளுக்கு ஒரு ரொட்டியையாவது செய்து முடிக்கலாம் என்ற எண்ணத்துடன் அதனை செய்து முடிக்கும் தருணத்தில் சமையல் அறையின் பக்கமாக அம்மா பசிக்குது என்ற ஒரு குரல் கேட்டது. யாருடைய குரல் என்று அவள் பார்த்த போது அங்கே மிகவும் வயது முதிர்ந்த ஏழை முதியவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவளிடம் இருப்பது ஒரு ரொட்டி. பிள்ளைகள் பாடசாலைக்கு ஆயத்தமாகி வரப்போகின்றார்கள். இருக்கும் ஒரு ரொட்டியை அவர்களுக்கு மூன்று துண்டுகளாக்கி கொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது கேட்ட குரல்: அம்மா பசிக்குது! என்ன செய்வது? என்று ஒரு கணம் யோசித்த பொழுது உன் செய்கைக்குதக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவார் என்ற வசனம் அவள் நினைவுக்கு வந்தது. அப்போது அவள் பிள்ளைகளின் சிந்தனையை விட்டு மனப்பூர்வமாய் இருந்த ஒரு ரொட்டியையும் அந்த ஏழை முதியவரின் கரங்களில் வைத்தாள். அந்த முதியவரும் சந்தோஷமாய் நன்றியுடன் கடந்து சென்றுவிட்டார்.

சில நிமிடங்களின் பின் பிள்ளைகள்

பாடசாலைக்கு ஆயத்தமாகி, அம்மாவிடம் காலை உணவினைப் பெற்றுக் கொள்வதற்காக சமையல் அறையில் வந்து நின்றார்கள். சாவித்திரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. காலையில் நடந்த காரியத்தை பிள்ளைகளிடம் கூறினாள். ஆனால் அவர்களோ அம்மா நீங்கள் மனப்பூர்வமாய் ஒரு நல்ல காரியம் செய்திருக்கின்றீர்கள். கடந்த ஞாயிற்றுக் கிழமை ஞாயிறு பாடசாலை ஆசிரியர்: **ஏழைக்கு இரங்குகின்றவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்: அவன் கொடுத்ததை அவர் திரும்ப கொடுப்பார் - நீதிமொழிகள் 19:17** என்று கூறி, பரவாயில்லை அம்மா, நாங்கள் இன்று பாடசாலைக்கு சென்று வந்தபின் சாப்பிடுகின்றோம் என்று சந்தோஷத்துடன் அம்மாவுக்கு *Bye* சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அவர்கள் சென்று சில மணி நேரங்களின் பின் சாவித்திரிக்கு அக் கிராமத்தில் இருக்கும் ஒரு பெரிய செல்வந்தரிடம் இருந்து அழைப்பு வந்தது. உடனடியாக சாவித்திரி அம்மாவை தன்னுடைய வீட்டிற்கு வரும்படியாக. அவளுக்கோ என்ன செய்வது என்று தெரியவில்லை. ஏன் இப்பெரியவர் என்னை தன்னுடைய வீட்டிற்கு வரும்படி அழைக்கின்றார் என்ற பயத்துடன் அவ் வீட்டிற்கு சென்றாள். அப்போது, அந்த பெரியவர் நான் தான் இன்று காலையில் உன்னுடைய வீட்டிற்கு ஏழை மனிதன் போன்று வந்தவன். நான் இன்று காலையில் அனேக வீடுகளுக்கு சென்ற போதும் யாரும் என்னுடைய குரலுக்கு செவிசாய்க்கவில்லை. ஆனால் நீயோ மனப்பூர்வமாய் எனக்கு உன்னிடம் இருந்த அந்த ஒரு ரொட்டியையும் தந்தாய். இதோ நான் என்னுடைய அனைத்து சொத்துக்களையும் விட்டு நான் வெளிநாடு செல்கின்றேன். எனவே இவை எல்லாவற்றையும் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் எழுதியுள்ளேன் என்றார். சாவித்திரிக்கோ தன்னுடைய செவிகளால் தான் கேட்ட வார்த்தைகளை நம்பமுடியவில்லை. சாவித்திரியின் மனப்பூர்வமான செயல் அவளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

**யாத்திராகமம் 35:22 மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகல வித பொன்னாபரணங்களையும் கொண்டு வந்தார்கள்: கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினான்.** மனப்பூர்வமுள்ள ஸ்திரீ, புருஷர் யாவரும் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தின ஒவ்வொருவரும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினர் என காணப்படுகின்றது. **முதலில் மனப்பூர்வமுள்ள ஸ்திரீ அடுத்து வருவது புருஷர்.** எனவே ஒரு ஸ்திரீக்குத் தான் முதலில் மனப்பூர்வம் ஏற்பட வேண்டும்.

இதை வாசிக்கும் சகோதரியே! என்னிடம் எங்கே பொன் இருக்கின்றது, காணிக்கையாக செலுத்துவதற்கு என நீ சிந்திக்கலாம்.

வேதாகமத்தில் சாராளின் வாழ்க்கையை பார்த்தால் அவள் மனப்பூர்வமாய் செய்த காரி

யங்களின் நிமித்தம் அவள் பெரிய ஆசீர்வாதங் களைப் பெற்றுக் கொண்டாள்.

**ஆதியாகமம் 12:1 கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.** என்றவுடன் **சாராளும் நானும் வரவேண்டுமா? எங்கே, ஏன், கட்டாயம் செல்ல வேண்டுமா? தேசத்தை, இனத்தைவிட்டு போவதா என்ற எந்தக் கேள்விகளையும் தன் கணவனிடம் கேட்காமல் கீழ்ப்படிந்து, மனப்பூர்வமாய் ஆபிரகாமுடன் செல்கின்றாள.** அதுமட்டுமல்ல, **ஆதியாகமம் 18:1-10** ஒரு நாள் திடீரென பகலின் உஷ்ண வேளையில் ஆபிரகாம் மூன்று புருஷரைக் கண்டு கட்டாயப்படுத்தி, தன்னுடைய இடத்திற்கு வந்து அப்பம் புசித்து கொஞ்சம் இளைப்பாறி, பின் நீங்கள் செல்லலாம் என்று கூறி, கூடாரத்தில் சாராளினிடத்தில் சென்று நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மா எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு என்றான். இங்கும் சாராள் தன் கணவரிடம் எந்த கேள்வியும் கேட்கவில்லை. **உஷ்ணம் அதிகம், சமையல் முடிந்துவிட்டது, இனி திரும்ப என்னால் அப்பம் சுடமுடியாது, மாவு இல்லை, நான் களைத்துப்போய் இருக்கின்றேன், கட்டாயம் அப்பம் தான் சுடவேண்டுமா, அப்பத்தைவிட வேறு ஏதாவது இலகுவாக செய்து கொடுக்கமுடியாதா, ஏன் நீங்கள் எங்கோ சென்றவர்களை கூட்டிவந்து இருத்தியிருக்கின்றீர்கள் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்** என கேள்வி மேல் கேள்வி கேட்டதாக இவ் அதிகாரத்தில் நாம் காணமுடியாது.

ஆபிரகாமுக்கும் தன் மனைவி தான் செய்யும்படி கட்டளையிட்ட காரியத்தை மனப் பூர்வமாய் செய்வாள் என்ற நம்பிக்கை இருந்த படியால் புருஷரை தன்னுடைய கூடாரத்திற்கு அழைத்தான், அவர்களை இருத்தினான், புசிக்க ஆகாரம் கொடுத்தான். அப்பம் சுட்ட ஆளை வந்தவர்கள் காணவில்லை. உன் மனைவியாகிய சாராள் எங்கே என்றார்கள்? கேட்டவுடன் சாராள் ஓடிவந்திருக்கலாம், ஆனால் **அவள் கணவன் கூப்பிடாத இடத்திற்கு தான் வரக்கூடாது** என்ற நோக்கத்துடன் கூடாரத்திலேயே நின்றுவிட்டாள்.

அப்பொழுது அவர் உற்பவகாலத் திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்தில் திரும்ப வருவேன், அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்கு பின்புறமாய் கூடார வாசலில் இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். **ஆதியாகமம் 21:1 கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்: கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்.** ஆபிரகாம் முதிர் வயதாய் இருக்கும் போது சாராள் கர்ப்பவதியாகி தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். **சாராளின் கீழ்ப்படிவும், அவளுடைய மனப்பூர்வமான செயலும்**

**அவளுக்கு இருந்த ஒரு பெரிய குறை தேவனால் நீக்கப்பட காரணமாயிருந்தது.**

என்னுடைய குறைவு இன்னும் நீக்கப் படவில்லை என நீ அங்கலாய்த்துக் கொண்டிருக் கின்றாயா? சாராளுக்கு உரைத்தபடியே தேவன் குறித்திருந்த காலத்திலே அந்த குறைவு நிறைவாக்கப்பட்டது. உன் குறையையும் நிறைவாக்க உன் தேவன் ஆயத்தமாய் இருக்கின் றார். **நீ செய்ய வேண்டியது கடந்த நாட்களில் நீ உன் தேவனுக்கு, உன் சபைக்கு, உன் குடும்பத் திற்கு, மற்றவர்களுக்கு நீ செய்த காரியங்கள் மனப்பூர்வமாய் செய்யப்பட்டதா என சிந்தித்துப் பார்.**

உன் கணவனுக்கு நீ கீழ்ப்படிய வேண்டும். நீ செய்யும் நன்மையான காரியங்கள் மனப்பூர்வமாய் செய்யப்பட வேண்டும், அப்போது உன் குறைவு நிறைவாக்கப்படும். கர்த்தருடைய கண்கள் மனப்பூர்வமான ஸ்திரீ களை தேடுகிறது. **ஏன் அந்த ஸ்திரீயாக மனப்பூர்வமாய் நீ மாறக்கூடாது.** தேவன் தாமே மனப்பூர்வ முள்ள ஸ்திரீகளை ஆசீர்வதிப்பாராக.



# வினா விடை - 75

01. "பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது" என்றது யார்?
02. கடலிலிருந்து புறப்பட்டு வந்த நதியின் பெயர் என்ன?
03. "தமக்கை" என்ற வார்த்தை காணப்படுவது எங்கே?
04. ஒரு பட்டாளக்காரனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் யார்?
05. எந்திரக்கல்லால் மண்டை உடைந்து செத்த வீரன் யார்?
06. ஒளியும் இருளாகும் தேசமெது?
07. "தமயன்" என்ற வார்த்தை காணப்படுவது எங்கே?
08. பவுலுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் யார்?
09. பெருங்காற்று மழையில் மிகவும் அடிபட்டது யார்?
10. எரிகிற அக்கினியில் இருள் இருந்ததெங்கே?




J. கிறேசியன்




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் காலத்திற்கு காலம் தம் பிள்ளைகளின் வாழ்வில் நன்மை செய்கின்றவராக இருக்கின்றார். ஆதியாகம புஸ்தகத்திலே ஆண்டவர் ஆபிரகாம் என்னும் தனி மனிதனை தமக்காக பிரித்தெடுத்து அவனை ஆசீர்வதிக்கின்றார், அவனை நடத்துகின்றார். இப்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் ஒரு நாள் ஆபிரகாமை தேவன் சந்திக்கின்றார்.

**ஆதியாகமம் 15:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப் படாதே: நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கி றேன் என்றார்.**

இன்னொரு மொழி பெயர்ப்பு கூறுகின்றது: **"நான் உன்னை பாது காப்பேன், பெரிய பரிசு தருவேன்"** என்று கூறுகின்றது. இங்கே நாம் பார்க்கின்றோம்: ஆபிரகாம் ஏதோ ஒரு பயத்தினால் ஆழப்பட்டு இருக்கின்றான் என்பதை அறிந்த ஆண்டவர் அவன் பயத்தை போக்க அவனோடு பேசுகின்றார்.

அன்பு சகோதரா, சகோதரி ஆபிரகாம் போன்று நீயும் ஏதோ ஒரு பயத்தினால் ஆழப்பட்டு இருக்கலாம். உன்னை தேவன் காண்கின்றவராக இருக்கின்றார். ஆபிரகாமைப் பார்க்கும் போது அவனுக்கு எல்லாம் தாராளமாக இருக்கின்றது. **ஆதியாகமம் 13:2 ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளி யும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்.** திரும்ப வும் தேவன்: **ஆதியாகமம் 15:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உணடாகி, அவர்:**

**ஆபிராமே, நீ பயப்படாதே: நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.** இன்னும் தருவேன், அப்போது தான் அவனுடைய பயத்திற்கான விளக்கம் வருகின்றது.

**ஆதியாகமம் 15:2 அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே: தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான்.** கர்த்தராகிய ஆண்டவரே எனக்கு என்னதருவீர் என்றான். இதே போன்று நாம் பல எதிர்பார்ப்புக்கள், பல தேவைகள், மத்தியில் **தேவனால் எனக்கு என்ன கிடைக்கும்?** எனும் வார்த்தையோடு கூட நாம் இருக்கலாம் தேவன் அதனைச் சந்திப்பார். ஆபிரகாம் கூறுகின்றான்: நான் பிள்ளை அற்றவனாயிருக்கின்றேனே என்று. ஏனென்றால், ஆபிரகாமின் பயமே தன்னுடைய ஆஸ்திகளை ஆழ்வதற்கு பிள்ளை இல்லை என்பது தான். அது தான் பெரும் தேவை! அது தான் அவனுடைய பயத்திற்கும் காரணம்.

அன்பு உள்ளமே நீயும் இப்படிப்பட்ட பெரிய தேவை, பெரிய எதிர்பார்ப்போடு, வாழ்ந்து கொண்டிருக்கலாம். இந்த தேவை எப்படி சந்திக்கப்படும் எனும் பயத்தோடு இருக்கலாம். தேவனிற்கு எல்லாம் தெரியும். தேவன் ஆபிர காமை ஆசீர்வதிக்க: **ஆதியாகமம் 15:5 அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத் திரங்களை எண்ண உன்னாலே கூடுமா னால், அவைகளை எண்ணு என்று சொல்லி: பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.** அவன் வெளியே வர வேண்டும். தேவன் எம்மை ஆசீர்வதிக்க நாம் வெளியே வரவேண்டும்.

**01. சுயத்தில் இருந்து வெளியே வரவேண்டும்.**

**02. அவநம்பிக்கையில் இருந்து வெளியே வரவேண்டும்.**

**03. பயத்தில் இருந்து வெளியே வரவேண்டும்.**

**04. சூழ்நிலையில் இருந்து வெளியே வரவேண்டும்.**

**05. மனக்குழப்பத்தில் இருந்து வெளியே வரவேண்டும்.**

அப்போது தான்: **ஆதியாகமம் 21:2 ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.** தேவன் குறித்த காலத்தில் தேவை சந்திக்கப்படும்.

---

**இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!**

தேவ அழைப்பின் போது விட்டுச் செல்லப்பட்டன:

பின்மாற்றத்தின் போது எடுத்துச் செல்லப்பட்டன: இவை எவை?

இதன் விடையையும் எழுதி அனுப்புங்கள்




## ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

### திருச்சபை ஒழுக்கம்

தேவனுடைய சபை பரிசுத்தமானது. **கிறிஸ்துவுக்குள்ளான எம் நிலையினால் நாமும் பரிசுத்தரே.** விசுவாசிகள் - பரிசுத்தவான்கள் என அழைக்கப்பட கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். **1கொரிந்தியர் 1:2, ரோமர் 6:22 இவற்றின் பிரகாரம் பரிசுத்தமாகுதல் எங்களுக்குக் கிடைக்கும் பலன் ஆதலால் எம் வாழ்க்கையில் அது காணப்பட வேண்டும்.** சபையானது பரிசுத்தமாய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறது. **இது சபை அங்கத்தவர்களின் பூரண அர்ப்பணிப்பு, பிரதிஷ்டையையும் உண்மையான பரிசுத்தமாகுதலையும் உள்ளடக்கி இருக்கிறது – 1பேதுரு 1:15–16.**

**1தீமோத்தேயு 3:15இன் பிரகாரம் சபையானது ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது.** கிறிஸ்துவும் அவர் வசனமும் சத்தியம். அத்துடன் அவர் சபைக்கு கொடுத்ததும் சத்தியம். **நாம் தேவனுடைய சபை ஆகையால் தேவனின் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாகிய பொக்கிஷத்தைக் காக்கும்படி பெற்றுக் கொண்டுள்ளோம்.** எங்களது பெரும்பணி என்னவெனில், **இந்த சத்தியத்தைப் பிரசங்கிப்பதும், காப்பதும், சத்தியத்தை வாழ்ந்து காட்டுவதும் ஆகும்.**

**இந்தப் பணியை நிறைவேற்ற சபையானது எல்லாவற்றிலும் தேவனுக்கும் அவர் வார்த்தைக்கும் உண்மையுள்ளதாய் இருக்க வேண்டும்.** சபையின் அங்கத்தவர்கள் பரிசுத்தத்திலும், சத்தியத்திலும் வாழ வேண்டும். **யாராவது தவறினால் அவர்கள் திருத்தப்பட வேண்டும்.** அவர்களுக்குப் புத்தி கூறி, அறிவுரை வழங்கி இவர்களுக்குக் கிடைத்த பரம அழைப்புக்கு இவ் உலகத்தில் எப்படி பாத்திரராக வாழ்வது எனச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஆனால் சபை மக்கள் உண்மையாக கிறிஸ்துவைப் பின்பற்ற விருப்பமற்றிருந்தால், தேவ வசனத்திற்கு முரணாக வாழ்ந்து கிரியை நடப்பித்தால் - **அப்படிப்பட்டவர்கள் மேல் சபையானது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.** இதைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

## சபை ஒழுக்கத்தின் அவசியம்

### 01. இயேசுவின் சொந்த வார்த்தைகள்

மத்தேயு 18:15-17. **இதற்கு ஒப்பான நடைமுறை காரியங்கள் நிருபங்களிலும் காணப்படுகிறது. உதாரணம்: 1கொரிந்தியர் 5:13, ரோமர் 16:17-18, தீத்து 3:10-11.** இவ் வசனங்களின்படி ஒழுங்கு நடபடிக்கான காரணங்களைப் பார்த்திருப்பீர்கள்.

01. தவறு, 02. பிரிவினை

11தெசலோனிக்கேயர் 3:11-15 மூன்று பிரதான காரியங்களின் நிமித்தம் சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். **இல்லாது போனால் சபையின் உபதேசத்தின் துப்புரவையும், அதன் அங்கத்தவர்களின் பரிசுத்தத்தையும், அதன் ஐக்கியத்தையும் கெடுத்துவிடும்.** சபையானது தேவ சத்தியத்திற்கு உண்மையுள்ளதாக காக்கப்பட வேண்டும். **பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக இருப்பதற்கு இடையூறு விளைவிக்கும் எல்லாவற்றுக்கும் விலகி இருக்க வேண்டும்.**

அத்துடன் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப் பாட்டைக் காக்க வேண்டும் - எபேசியர் 4:3. **சபையின் ஒழுக்க நடவடிக்கை பின்வரும் குறிக்கோளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.**

01. வேதாகம உபதேசத்தினுள்ளானது.

02. கிறிஸ்தவ குணயியல்பை உருவாக்குவது.

03. தேவனோடும் மற்றவர்களோடும் ஆவிக்குரிய உறவை கட்டி எழுப்புவது.

சபையானது எப்போதும்: 1. தவறான உபதேசங்களுக்கு எதிராகவும் 2. எல்லாவகையான பாவங்களுக்கு எதிராகவும் 3. ஐக்கியத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய எல்லாவற்றிற்கும் விரோதமாகவும் போராட வேண்டும்.

### 02. பாவம் செய்பவர்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

தவறுவிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு தங்களது பாவம் தெரியாது. **ஒழுங்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்கள் நிலை மிகவும் பயங்கரமாக இருக்கும்.** இது அவர்களைத் தட்டி எழுப்பவும், தேவனோடும் சபையோடும் சரியான உறவுக்குள் அவர்களைக் கொண்டுவருவதற்கும் ஏதுவாக இருக்கும். **இவ்விதமாக நாம் செய்ய**

**நினைக்கும் போது, தவறுவோரைத் திருத்துவதற்கான சரியான பரிகாரம் என்ன என்பதனைக் கண்டு கொள்ள வேண்டும்.**

சரியான விதமான ஒழுங்கு நடவடிக்கைகள் அற்புதங்களைச் செய்யும் - கலாத்தியர் 6:1. **எம் கடமை தவறு செய்பவனை அதட்டுவது மாத்திரம் அல்ல: அவனைக் கட்டியெழுப்புவதும் ஆகும்.** நாம் இப்படிச் செய்தால் மத்தேயு 18:15இல் சொல்லப்பட்டபடி அவர்களை ஆதாயப்படுத்தலாம். **தவறு இழைப்பவனை நாம் சபையைவிட்டு விலக்குவதாக இருந்தாலும் எம் குறிக்கோள்:**

01. அவன் தன் பாவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

02. மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும்

**என்பதும் ஆகும்.** உண்மையான ஒழுங்கு நடவடிக்கை "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும்", "அவர் அதிகாரத்தோடும்" இருக்க வேண்டும். 1கொரிந்தியர் 5:4. **அதாவது எம் செய்கை அன்போடும், தேவ ஆவியானவரின் வழிநடத்தலோடும் இருக்க வேண்டும்.** பழிவாங்குவதாகவும், எதிர்க்க வேண்டும் என்ற பெருமையோடும் இருக்காது.

## 03. முழுச்சபையின் பாதுகாப்பிற்காக

ஒரு சபையானது ஒழுக்க நடவடிக்கையில் ஈடுபடும் போது மற்ற எல்லா அங்கத்தவர்களையும்: பாவம், தவறான உபதேசம், பிரிவினை என்ற ஆபத்துக்களுக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக மாற்றும். **இதன் மூலம் சபையார் கிறிஸ்தவனாக இருப்பதன் மூலாதாரத்தை புரிந்து கொள்வார்கள்.** இதன் மூலம் தேவனோடு தொடர்ந்து நடக்கவும், **பாவத்தில் விழாதபடியும், தவறுகளில் சிக்காதபடியும் உதவலாம்.** தேவன் அனனியா – சப்பீராளின் பாவத்தை நியாயம் தீர்த்த போது ஆரோக்கியத்திற்கு ஏதுவான தாக்கம் முழுச் சபையிலும் உண்டானது.

**அப்போஸ்தலர் 5:11 சபையாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயம் உண்டாயிற்று.** தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யப்பயப்படுவது பூரணமான ஒன்று ஆகும். **இந்த "மிகுந்த பயம்" அதிகம் நமக்குத் தேவை.** எருசலேம் சபையில் காணப்பட்ட இந்த "மிகுந்த பயம்" நம் மத்தியில் காணப்பட்டால் பூரண கிருபை காணப்படும். **மிகுந்த பலமாய் சாட்சியும் கூறுவோம் – அப்போஸ்தலர் 4:33.**

நம் சபையில் ஒழுக்க நடவடிக்கையில் ஈடுபடாவிட்டால் தீய காரியங்கள் சபைக்குள் வந்துவிடும் - 1கொரிந்தியர் 5:6-8. **சபையானது தீங்கானதை சகித்துக் கொண்டு இருக்குமானால், கர்த்தருடைய பரிசுத்த சபையாக விளங்குவதற்கு தேவையான உண்மையான குணாதிசயத்தை இழந்துவிடும்.** ஒழுக்கம் வழுவிய சீர்கேடு நிலையில் சபை இல்லாதிருந்தால் அதற்குள்

மற்றவர்கள் விழ சந்தர்ப்பம் ஏற்படாது. **ஒரு மனிதனின் ஜீவனைத் தப்பப்பண்ண வியாதிப்பட்ட அவயவம் வெட்டப்படுகிறது.** இதே போன்று தான் சபையிலும் ஆகும். **சபையின் ஆவிக்குரிய தன்மை உயிரோடு காக்கப்பட ஒழுக்க நடவடிக்கை அவசியம்.**

### 04. உலகத்தை வசீகரிக்க

சபையின் தரம் உயர்ந்ததாக எப்பொழுதும் இருக்க வேண்டும். **ஆவிக்குரிய முக்கியத்துவம் மதிக்கப்பட வேண்டும்.** ஒழுக்க நடவடிக்கை இல்லாமல் இதை சாதிக்க முடியாது. **நாம் உலகத்தின் மக்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்த சரியான தோற்றத்தை, எண்ணத்தை கொடுக்க வேண்டும். உண்மைக் கிறிஸ்தவம் ஒழுக்க நடவடிக்கைகளையும் கொண்டதாகத் தான் இருக்க வேண்டும்.** அல்லது அது உண்மையானதாக இருக்க முடியாது.

**அத்துடன் வேதமும் இதற்கு மாறான கிறிஸ்தவ வாழ்க்கையை அறிவிக்கவில்லை.** எருசலேம் சபை – சுத்திகரிக்கப்பட்டதன் பின் ஏற்பட்ட விளைவு மகத்துவமானது: **அனனியா – சப்பீராள் இருவரும் தண்டிக்கப் பட்டதன் பின் ஏற்பட்ட விளைவுகளைப் பாருங்கள். அப்போஸ்தலர் 5:12–16.**

1. மிகுந்த பயம் உண்டாயிற்று.
2. அநேக அடையாளங்களும், அற்புதங்களும் செய்யப் பட்டது – பிணியாளிகள் சொஸ்தமானார்கள், பிசாசு பிடித்திருந்தவர்கள் விடுதலை அடைந்தார்கள்.
3. அற்புதமான ஒரு மனம்
4. ஜனங்கள் மத்தியில் மேன்மை
5. அப்போஸ்தலர் 5:17-20 பரலோகத்தில் இருந்து ஒத்தாசை இவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

பரிசுத்தமாக்கப்பட்ட உண்மைச் சபையை எதிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. கர்த்தரின் கரம் எப்பொழுதும் அந்தச் சபையின் மீது இருக்கும். **அப்படிப்பட்ட சபையில் இருந்து உலகிற்கு ஆசீர்வாதம் தான் உண்டாகும்.** இப்படிப்பட்ட சபை செழிப்பதை எதுவும் தடை பண்ணமுடியாது. **வெற்றியில் இருந்து வெற்றிக்குப் போவதையும், எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய பலத்தில் வளர்வதையும் தடுக்க முடியாது.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

**முற்றும்.**

அன்பின் வாசகர்களே! இதுவரை வெளியாகிய புதிய ஏற்பாட்டுத் திருச்சபை எனும் பாகம் இப் பகுதியுடன் நிறைவடைகின்றது. இதன் மூலம் உங்கள் ஆவிக்குரிய அறிவு வளர்ந்திருக்கும் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகின்றோம். நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எமக்கு எழுதமறவாதீர்கள்.

# குறுக்கெழுத்துப்போட்டி - 73

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ✪ | ✪ | | 02 |
| ✪ | ✪ | | | | | 03 | | |
| | | | | 04 | ✪ | | | |
| | | | 06 | 05 | | | | |
| | 07 | ✪ | ✪ | | | | | |
| | | | ✪ | | | | | ✪ |
| | | | ✪ | | | ✪ | | ✪ |
| | | | 10 | | 09 | ✪ | 08 | ✪ |
| 11 | ✪ | 12 | ✪ | ✪ | | | | 13 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. ராகேலின் கல்லறை இங்கே இருந்தது
10. மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்: மனத்தாழ்மையுள்ளவனோ ............ அடைவான் (குழம்பியுள்ளது)

## வலமிருந்து இடமாக

03. அம்னோனின் அம்மா
04. இவன் முந்தியெழும்பினவன்: ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான்
06. விசுவாசத்தினாலே இவன் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான் (குழம்பியுள்ளது)
13. இவன் சிபெக்காய் கொன்றுபோட்ட இராட்சத புத்திரன்

## மேலிருந்து கீழாக

02. கர்த்தருடைய தூதன் கர்வாலி மரத்தின் கீழே இந்த ஊரிலே உட்கார்ந்தார்
03. கர்த்தர் இவனை பெசலெயேலுக்குத் துணையாகக் கூட்டினார்
05. அகோலிபாள் என்று பெயர் பெற்ற நகரம்
07. இதன் அர்த்தம் "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்"

## கீழிருந்து மேலாக

08. பாஷா, இவனுடைய வழிகளிலும் இவனுடைய பாவத்திலும் நடந்தான்
09. கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கொடுத்த தேசத்திலே இவைகள் இரும்பாயிருக்கும்
11. தேவன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலை இவனுக்கு கட்டளையிட்டதினால் இவன் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது
12. யெகூவின் கட்டளைப்படி ஜன்னலிலிருந்து கீழே தள்ளப்பட்டவள்

# செய்யக் கூடாததை...



## வேதப்பகுதி: ஆதியாகமம் 3:1–8

கமல்ராஜாவுக்கு அன்று விடுமுறை. எனவே அவன் வீட்டில் இருந்தான். கமல் அலுமாரியில் உனக்காக நிறைய நல்ல கதைப் புத்தகங்கள் வாங்கி வைத்திருக்கின்றேன், எடுத்துப்படி. ஆனால் அங்கே சிவப்பு அட்டை போட்ட புத்தகம் ஒன்று இருக்கிறது. அதை எடுக்காதே. அது சண்டைகளைப் பற்றிய புத்தகம். அது உனக்கு வேண்டாம் என்றார் கமலின் தந்தை. வெளியே சென்ற கமலின் தந்தை வீடு திரும்பினார். அப்போது கமல் அந்த சிவப்பு அட்டை புத்தகத்தை எடுத்து படித்துக் கொண்டிருப்ப தைப் பார்த்தார். அவர் மிகவும் வருத்தப்பட்டார்.


எதைச் செய்யக்கூடாதோ அதனைத் செய்யத்தான் சாத்தான் தூண்டுவான். குறிப்பிட்ட பழத்தை சாப்பிட வேண்டாம் என்று தேவன் ஆதாமுக்குச் சொன்னார். ஆனால் அதைத்தான் அவன் புசித்தான். எனவே தேவன் வருத்தம டைந்தார். தேவனே, நான் செய்யக்கூடாது என்று நீர் சொல்லுகிறவைகளை நான் செய்யாமலிருக்க கிருபை தாரும் என்று ஜெபிப்பீர்களா?



**சிந்தனைக்கு:–** எதைச் செய்யக் கூடாதோ அதைச் செய்யத்தான் ஆசை வரும். அது பிசாசின் தூண்டுதல். அதனை ஜெயிக்க தேவகிருபை வேண்டும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜனவரி 09



## சந்தியாகு

-

## தேசத்தை சொந்தமாக்குவோம்

ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த காலம். திருச்சபையில் பாடல்களும், ஆங்கில தொனியிலேயே முழங்கிக் கொண்டிருந்தன. தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே நற்செய்தி ஆர்வத்தைப் பெருக்குவதற்கு ஆதவன் போன்று உதித்தார் சந்தியாகு என்ற மாமனிதர்.

கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியை நூற்றுக்கு நூறாக ஆதரித்து, அவர்களின் மதத்தைத் தழுவுபவர்கள் என்ற கருத்து பரவியிருந்த காலத்தில், இயேசு அறிமுகப்படுத்திய இறையாட்சியே உலகின் அத்தனை ஆட்சிகளுக்கும் மேலானது என்பதைத் துணிவுடன் எடுத்துரைக்கவே, சந்தியாகு ஐயர் பிறந்தார். இறையாட்சி என்பது சமுதாய நலன்களையும், பொறுப்புக்களையும் சுட்டிக் காட்டி அனைத்து மக்களின் நலன்களுக்கும் அடிகோலும் என்பதைத் தம் பாடல்கள் வாயிலாகப் பறைசாற்றினார்.

"தாசரே இத்தரணியை அன்பாய் இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்" என்ற பாடலையும், "இயேசுவுக்கு நமது தேசத்தை" என்ற இறையாட்சியின் பாடலையும் எழுதி மக்கள் மனதில் ஆழமாகப் பதியச் செய்தார்.

பசியுற்றோர், பிணியாளிகள், நெருக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், நீசர் எனப்படுவோர், துன்பங்களுக்குள்ளும், பழுகுழிகளுக்குள்ளும் விழுந்தோர், சத்திய வழிதப்பி நடப்போர், சிறந்து விளங்க வேண்டிய

தாய்க்குலத்தோர், தீயபழக்கம், வீண்பக்தி, மாயக்கோட்பாடு ஆகியவைகளில் சிக்குண்டு கிடப்போர் ஆகிய பலவகைப்பட்ட மக்களையும், இயேசுவின் நற்செய்திக்கு நேராக அறைகூவி அழைத்தார்.

இந்துப் பின்னணியிலிருந்து வந்ததால், ஆண்டவருக்கென்று முழு வைராக்கியத்துடன் ஊழியம் செய்யத் தன்னை அர்ப்பணித்தவர் இவர். கணிதப் பேராசிரியராகத் தனது பணியைத் துவக்கி, பின்னர் திருச்சபைப் போதகராக முழுநேரப் பணியில் தம்மை ஈடுபடுத்தி, திருச்சபை ஒருமைப்பாட்டிற்காகப் பாடுபட்டவர். இவரின் உயிர்மீட்சிப் பாடலால் ஆயிரக்கணக்கானோர் உள்ளொளி பெற்று, நல்வழி நடந்து கிறிஸ்துவின் தொண்டராய் வாழ்ந்து வருகின்றனர்.

**அன்பரே! சமுதாயம் சீர்திருத்தப்பட உங்களின் பங்கு என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாம் முயன்றிடுவோம், நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம் — சந்தியாகு.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 29**

## கிளாரா ஸ்வைன்
## 1834 - 1910



### வாய்ப்புகளைப் பயன்படுத்து

வாய்ப்புகளும், பதவிகளும் எல்லா நேரமும் எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை. சில வாய்ப்புகள் நம்மைத் தேடி வரும் போது நாம் அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் உயர் பதவிகளை நாம் அடையும் போது, அப் பதவியின் மூலமாக நம்மால் இயன்ற சுவிசேஷ பணியைச் செய்வது அவசியமாகும்.

அமெரிக்க நாட்டில் பிறந்த கிளாரா ஸ்வைன் தனக்கு கொடுக்கப்பட்ட உன்னத வாய்ப்பை சரியான முறையில், சரியான நேரத்தில் செயல்படுத்தினார். ஒரு பள்ளி ஆசிரியராக தன்னுடைய பணியை ஆரம்பித்த இவர், மருத்துவப் படிப்பை பிலதெல்பியாவில் முடித்தார்.

1870ஆம் ஆண்டு, ஆண்டவரின் அழைப்பை உணர்ந்து இந்தியா வந்தார். அந் நாட்களில் மருத்துவ மிஷனெரியாக கடல் கடந்து வந்த பெண்களில் இவரே முதன்மையானவர். இந்தியாவில் காணப்பட்ட மொழியை கற்றுக் கொள்வதில் சற்று சிரமம் ஏற்பட்டாலும், மிகுந்த வாஞ்சையுடன் அவைகளைக் கற்றார்.

1873ஆம் ஆண்டு, பெண்களுக்கான முதல் மருத்துவமனையை ஆரம்பித்தார். இது சுமார் 40ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. முகமதிய அரசனான நவாப் கிறிஸ்தவர்களுக்கு எதிராக தீவிரமாய் செயல்பட்ட போதிலும், கிளாராவின் பணிகளைக் கண்ட அவர், இம் மருத்துவமனைக்கான நிலங்களை தானமாகக் கொடுத்து, கிறிஸ்தவ பணிகளை உற்சாகப்படுத்தினார்.


1880ஆம் ஆண்டு மட்டும் 7000க்கும் அதிகமான நோயாளிகளை இவர் பராமரித்தார். மேலும் தாதியர் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி, அநேக அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்க்கப்பட்ட தாதியர்களை உருவாக்கினார்.

1885ஆம் ஆண்டு ராஜ் புட்னாவை ஆண்டு வந்த அரசியின் விசேஷ மருத்துவராகப் பணி செய்தார். தனக்குக் கிடைத்த இம் மாபெரும் பதவியைப் பயன்படுத்தி, அவ்விடத்திலுள்ளோர் கிறிஸ்துவின் அன்பைக் கண்டு கொள்ள மிகுந்த பிரயாசங்களை மேற்கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைத்து, சிறந்த மிஷனெரியாகத் தன் பணியை நிறைவேற்றினார்.

**அன்பரே! வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் உங்கள் ஆர்வம் என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: "குருட்டுத்தனமாய் அற்பகாரியங்களில் உன் கவனத்தைச் செலுத்தி, பெரிய காரியங்களை நழுவவிடாதே. ஆத்தும இரட்சிப்பு மிகப் பெரியது"**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 26**



**அனல் 2016 மார்ச் - ஏப்ரல் மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை: சீரியா (ஆதியாகமம் 40:11, 37:9, 49:17)**

இவ் நொடிக்கான சரியான விடையை அனேகர் எழுதி அனுப்பியிருந்தீர்கள். விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

## வினாவிடை – 74
## சரியான பதில்கள்

01. யாக்கோபு ராகேலை – ஆதி 29:20
02. லோத்து – ஆதியாகமம் 19:19
03. பிசாசு பிடித்தவர்கள் குணமானபோது – மாற்கு 1:27, 5:20
04. இயேசு – மாற்கு 6:8
05. எத்திரோ மோசேயிடம் – யாத்திராகமம் 18:17
06. சோவார் – ஆதியாகமம் 19:20,22
07. பரலோகத்தில் மேன்மையும் சுதந்தரமும் உண்டென்று நம்பினவர்கள் – எபிரெயர் 10:34
08. இயேசுவின் தலையில் தைலம் பூசிய ஸ்திரீ – மாற்கு 14:8
09. கொர்நேலியு பேதுருவிடம் – அப்போஸ் 10:33
10. சீமோன், யாக்கோபு, யோவான் – லூக்கா 5:2

## குறுக்கெழுத்துப் போட்டி - 72
### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**
05. பாரேஸ்
07. நோவாள்
10. எப்பிராத்தா
12. பரிதானம்

**வலமிருந்து இடமாக**
04. பெத்மாக்கா
06. மீகா
08. தாவீதின்
11. திம்னாத்சேராவில்



**மேலிருந்து கீழாக**
01. மிக்ரோன்
02. மதியீனம்
03. காபூல்நாடு
04. பெரேஸ்

**கீழிருந்து மேலாக**
09. அகிமாஸ்
10. எப்பிராயீம்
12. பல்த்தி
13. அமுத்தாள்

*சரியான விடை எழுதியவர்களில்*
*பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:*



**வினாவிடை – 74**
அ. எஸ்தர்,
காரைநகர்.

**குறுக்கெழுத்துப்போட்டி – 72**
பொன்னாண்டோ ஜெசிதரன்,
யாழ்ப்பாணம்.

# சரியான விடை எழுதியவர்கள்
## குறுக்கெழுத்துப் போட்டி - 72, வினா விடை - 74

**கனடா**

01. குகன் குடும்பம்

**மீசாலை**

02. எஸ்.கெற்ஷியா *

**மானிப்பாய்**

03. வி.விஸ்ணகுமாரி ♦
04. வி.யதுர்சன் ♦

**நாவற்குழி**

05. இ.சுரேகா
06. சூ.ஜான்சி *

**பாண்டவெட்டை**

07. எஸ்.எமீமாள்
08. செ.நகுலா
09. செ.டிசேந்தன்
10. வ.ஜெயாழினி
11. வ.தயாழினி ♦
12. வ.குவாழினி
13. வி.ஜோஹனன்
14. வ.கெத்சியாள் ♦
15. எஸ். கயா
16. சி.றஜிந்தினி
17. எம்.நிதர்சினி
18. ரி.திருவதனி
19. சூ.உஷா

**காரைநகர்**

20. ம.மதுசன்டேவிட் *
21. லோ.வதனி *
22. பா.தர்சினி *
23. இ.மகேஸ்வரி ♦
24. இ.லக்சன் ♦
25. பா.அனுசியா ♦
26. வி.அனுராதா ♦
27. பா.அனுகரன் ♦
28. கோ.மங்களேஸ்வரி ♦
29. செ.பிறேமிளா ♦
30. அ.தெபோரா
31. அ.கிருசாந்தன்
32. அ.துர்க்கா
33. அ.எஸ்தர்
34. அ.கம்சிகா
35. நா.கிறிஸ்தீனா
36. நா.கிறிஸ்ரீன்
37. நா.அன்னாள்
38. பா.மோகனதாஸ் *
39. ந.தயாழினி

**நவக்கிரி**

40. அ.தயாளினி
41. க.கிருஷ்ணரூபா
42. த.பிரியங்கா *
43. எஸ்.ராஜினி

**யாழ்ப்பாணம்.**

44. பெ.ஜெசிதரன்

♦ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

குறிப்பு:- அன்பின் வாசகர்களே! குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடை போட்டிகளில் பங்குபெறுபவர்கள் இனிவரும் நாட்களில் இரண்டின் விடைகளையும் தனித்தனித் தாள்களில் எழுதி அனுப்புவதுடன், உங்கள் பெயர், முகவரி என்பவற்றையும் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

பிசாசு ஒழுங்கற்று காரியங்களைச் செய்கிறவன்: பாவம் உலகத்தில் புகுத்தப்படுவதற்கு பிசாசு கையாண்ட வழி: ஒழுங்குக்கேடு! எங்கெல்லாம் ஒழுங்கு மீறப்படுகிறதோ அங்கெல்லாம் பிசாசின் கிரியை காணப்படும்.







**ஏசாயா 55:8 என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல: உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

நாங்கள் ஒவ்வொரு நாளும் எத்தனை காரியங்களை நினைக்கிறோம். வித்தியாசம் வித்தியாசமான எண்ணங்கள் ஒவ்வொரு மனிதர்களுக்கும் காணப்படுகிற ஒன்றாகும். வித்தியாசமான நினைவுகளை சுமந்தவர்களாக ஒவ்வொரு மனிதர்களும் இருக்கிறார்கள். **சில நினைவுகள் தேவனோடு ஒத்ததாக இருக்கும்: அல்லது தேவனோடு ஒத்துப் போகாததாக இருக்கும்.** எங்களுடைய சிந்தனையில் தோன்றுகிற மனநிலை, எண்ணங்கள் ஆண்டவருடைய நாமத்தை உயர்த்துவதாக இருக்கும், சிலவேளை ஆண்டவருடைய நாமத்தை உயர்த்தாததாக இருக்கும். பலவேளைகளில் சரியானதாக இருக்கும், பலவேளைகளில் பிழையானதாக இருக்கும். இப்படி எங்களுடைய எண்ணங்களும், யோசனைகளும் இருக்கின்றது.

ஏதோவொன்று குறித்து மனிதனுக்குள் எழும்தோற்றப் பாடுகளை நினைவுகள் என்று சொல்ல முடியும். எப்பொழுதும் எங்களுடைய யோசனையை தேவனுடைய சித்தத்துடன் ஒப் பிட்டுப் பார்க்க வேண்டும். தேவனுடைய நினைவுகளை நாம் வேதத்தில் காணலாம். எனவே தேவனுடைய நினைவோடு எங்களு டைய நினைவு ஒத்துப் போகிறதா என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் கவனிக்க வேண்டும். என் நினைவு கள் உங்கள் நினைவுகள் அல்ல என்று ஆண்டவர் தன்னுடைய ஏக்கத்தை சொல்லுகிறார். தேவனு டைய நினைவிற்கு மாறான சில நினைவுகளைக் கொண்ட சில காரியங்களைப் பார்க்கலாம்.

**1. தேவனுடைய வார்த்தையை, வல்லமையைத் தவறாக நினைக்கக்கூடாது: மனிதனுடைய வாழ்க்கையைக் குறித்து தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தை நாம் தவறாக நினைக்கக்கூடாது.**

**யோவான் 11:11-13 (11.) இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரைய டைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார். 12. அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்ட வரே, நித்திரையடைந்திருந் தால் சுகமடைவான் என்றார்கள். 13. இயேசு வானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச் சொன்னார்: அவர்களோ நித்திரை செய்து இளைப் பாறுகிறதைக் குறித்துச் சொன்னா ரென்று நினைத்தார்கள். பலரு டைய வாழ்க்கையில் பிரச்சினை களுக்கு காரணம் பல மனிதர் களின் தவறான நினைப்புக்கள் தான்.** உண்மையான தேவனு டைய பிள்ளையாக இருந்தால் இன்னொரு மனிதனைக் குறித்து நினைக்கிற நினைப்பு எப்போ தும் சரியாக இருக்கும். நினைப்பு பிழைத்தால் சிலரு டைய வாழ்க்கை வேதனை யிலே முடிவடையும். இன் னொருவரைக் குறித்து நினைக் கிற நினைப்பு சிலவேளை வார்த்தையிலே வந்துவிடும். வார்த்தையில் வந்த அந்த நினைப்பு தவறானது என்றால் நாம் யாரைக் குறித்து தவறாக நினைத்தோமோ அவருடைய வாழ்வு இக்கட்டிற்குள் போய் விடும்.

லாசருவினுடைய சகோதரிகள், நீர் சிநேகிக் கிறவன் வியாதியாக இருக்கி றான் என்று இயேசுவிற்கு தூது அனுப்புகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி அறிவித் தும், ஆண்டவர் அங்கே போகவில்லை. அப்படியே இருந்துவிட்டார் என்று வேதம் சொல்லுகிறது. அதன் பின்பு அவன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டுவிட்டான்.

இயேசு சொன்னார், நம்முடைய சகோதரனாகிய லாசரு நித்திரை யடைந்திருக்கிறான், அவனை எழுப்பப்போகிறேன் என்று. லாசருவினுடைய மரணத்தை மறைமுகமாக சொன்ன போது அவர்கள் (சீஷர்கள்) நித்திரை கொண்டு இளைப்பாறுவதைக் குறித்து சொல்லுகிறார் என்று நினைத்தார்கள். பின்பு இயேசு தெளிவாகச் சொல்லுகிறார். லாசரு மரித்து விட்டான் என்று இயேசு தெளிவாகச் சொன்னதையும் புரிந்து கொள்ளாமல் அவர் சொன்னதிற்கு ஈடாக இன்னொன்றை நினைத்தார்கள்.

கிறிஸ்தவர்கள் விடுகிற பெரிய தவறுகள் இதுதான். எப்படியென்றால் ஆண்டவருடைய சத்திய வார்த்தைகள், தேவனுடைய ஜீவவார்த்தைகள், ஆண்டவர் செய்யப்போகிற காரியங்கள், தேவன் வேதத்திலே வெளிப்படுத்திய வெளிப்படுத்தல்கள், ஆண்டவரைப்பற்றி சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள், தேவனைப் பற்றி தீர்க்கதரிசனங்களாக சொல்லப்பட்டவைகள் எல்லாம் நேர்மையான, உண்மையான காரியங்கள். ஆனால் இந்தக் காலங்களில் தேவனுடைய வார்த்தையை தவறாகப் பார்க்கிறார்கள். தேவன் சொன்னதை தவறாக நினைக்கிறார்கள். தேவன் சொல்லிய சத்தியத்தை மாற்றி நினைக்கிறார்கள். தேவன் சொல்லிய வார்த்தைகளுக்கு ஈடாக இன்னொன்றை நினைக்கிறார்கள். இப்படி நினைத்து, நினைத்து அநேக மக்கள் ஆண்டவருடைய சத்திய வாக் குத்தத்தங்களையும் மறந்து போய்விட்டார்கள்.

இங்கே ஆண்டவர் சொன்னார், அவன் நித்திரையாக இருக்கிறான், எழுப்பப் போகிறேன் என்று. இங்கு நித்திரையின் உண்மையான கருப்பொருள் மரித்து விட்டான் என்பதாகும். இவர்கள் நித்திரை கொண்டு இளைப்பாறுதலை நினைத்தார்கள். தேவனுடைய ஆவியின் சத்தியத்தை நேராக விளங்கிக் கொள்கிற ஆவிக்குரிய ஞானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இங்கு இயேசுவோடு இருக்கிற சீஷர்கள் அதைப் புரியவில்லை. அநேக கிறிஸ்தவர்கள் ஏன் தோற்றுப் போகிறோம்? ஏன் விழுந்து போகிறோம்? என்றால் தேவன் சொல்லிய சத்திய வார்த்தை ஒன்று, நாம் அதற்காக வேறு ஒன்றை நினைக்கிறோம். இப்படியே நினைத்து, நினைத்து விழுநதுவிட்டோம்.

மனிதர்கள் சொல்லுவார்கள், பசியாய் இருந்தால் களவு எடுக்கலாம் என்று: ஆனால் தேவன் சொல்லுகிறார், நீ பாவம் செய்யாதே, களவு எடுக்காதே என்று. நாம் களவு எடுத்துவிட்டு, பசியாய் இருந்

தால் எடுக்கலாம் என்று நான் நினைத்தேன் என்று சொல்லு வோம். தேவன் சொன்ன வார்த்தை யின் தாற்பரியத்தைப் புரிந்து கொள் ளாமல் மறுதலிக்கிறோம். தவறாக நினைத்து ஆண்டவரின் அன்பை விட்டு தூரம் போன அநேக விசுவாசிகள் உண்டு. நாங்கள் தேவனுடைய இதயத் துடிப்பை, தேவன் சொன்ன வார்த்தையின் தாற்பரியத்தை நேராக நினைக்க வேண்டும். அவர் எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்துச் சொன்னாரோ அதைச் செய்ய வேண்டும். எங்களுடைய நினை வுகள் கர்த்தருடைய நினைவு களுக்கு மாறாக இருக்கக் கூடாது. வழி தப்பிப் போனார் களே என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலம் ஏக்கத்தோடு ஆண்டவர் சொல்லுகிறார். பலவேளைகளில் ஆண்டவருடைய சித்தத்திற்கு மாறாக ஓடுகிறோம், யோசனைக்கு மாறாக யோசிக்கிறோம்.

**யோவான் 11:16. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப் படையாய்ச் சொன்னார்: அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்.** தேவனு டைய வல்லமையை அவர்கள் நினைக்கவில்லை, இயேசுவின் அற்புதவார்த்தையை நினைக்க வில்லை, அவா சொன்னால் அது நடக்கும் என்பதை நினைக்க வில்லை, மறைமுகமாகச் சொன் னாலும் புரிந்து கொள்ளவில்லை. வெளிப்படையாகச் சொல்லியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு ஒரு நக்கல். நாமும் அவரோடுகூட மரிப்போம் வாருங்கள் என்றார்கள். இன்றைக்கும் அநேகர் சொல்லுவார்கள், தடுக்கி விழுகிற இடமெல்லாம் சபை என்று. தேவனுடைய நினைப்பு தன்னுடைய இரத்தத்தினால் உருவாக்கப்பட்டது சபை என்று. ஆனால் அநேகருடைய எண்ணம். சபை கீழ்த்தரமானது. சபையில் ஏழைகள். எல்லோராலும் ஒதுக்கப் பட்டவர்கள் தான் இருப்பார்கள் என்று. மக்களுடைய நினைவுகள் தேவனுடைய நினைவுக்கு மாறாக இருக்கிறது. ஆனால் சபை பரிசுத்த மானது. சபையின் தலை இயேசு என்பது தேவனுடைய நினைவாக இருக்கிறது.

தேவனுடைய பரிசுத்த இரத்தத்தினாலே மீட்கப்பட்ட வர்கள் எல்லோரும் அவருடைய பிள்ளைகள், அவர்கள் பரிசுத்த ஜாதி என்றே தேவன் பார்க்கின் றார். ஆனால் தேவனை அறிந்தி ருக்கிறேன் என தங்களை நினைத்துக் கொள்ளும் பலர் தேவன் எப்படி நினைக்கிறார் என்பதை அலட்சியம் செய் கிறார்கள். கர்த்தரின் வல்ல மையை, கர்த்தரின் அன்பை, கர்த்தர் ஏற்படுத்திய மகத்தான ஒப்புரவை, கர்த்தர் வேற்றுமை களைக் களைந்துவிட்டார் என் பதையும் இயேசுவின் சிலுவைப்

புண்ணியம் எது, அது என்ன செய்தது என்பதையும் கிறிஸ்தவ தோற்றம் போட்டிருக்கும் ஆண்களும், பெண்களும் நினைக்கத் தவறிவிட்டார்கள். இயேசுவின் தியாக பலியின் தன்மையை நினைக்கத்தவறிவிட்டார்கள். இயேசுவின் இரத்தம் உண்டு பண்ணிய அதிஉன்னத சுத்திகரிப்பின் மகிமையையும் அந்தச் சுத்திகரிப்பின் மூலம் கிறிஸ்து உருவாக்கிய ஐக்கியத்தையும் நினைக்காமற் போனார்கள். அவர்கள் மறைமுகமாக சொல்லியும் புரிந்து கொள்ளவில்லை, வெளிப்படையாக சொல்லியும் ஏற்றுக் கொள்ளவில்லை. கிறிஸ்துவோடு அவருக்கு பக்கத்திலே இருந்த சீஷர்களின் நினைப்பை பாருங்கள். தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவர் சொல்ல ஆகும். கட்டளையிட நிற்கும் என்றால் நாம் அவரை அப்படியே நினைக்க வேண்டும். எங்களுடைய நினைவுகள் கர்த்தருடைய வல்லமையை மட்டுப் படுத்துவதாக இருக்கக் கூடாது. எங்களுடைய யோசனை கள் அவருடைய சர்வ பலத்தை மறுதலிக்கிறதாக இருக்கிறதா? பல மனிதர்கள் தேவன் எங்களைப் போல ஒருவர் என்று நினைக்கிறார்கள். பிரியமானவர்களே, நாம் தேவனை தேவனாகப் பார்க்க வேண்டும். அவருடைய சர்வ வல்லமையை அப்படியே நினைக்க வேண்டும். புரிந்து கொள்ளுங்கள், நாங்கள் தான் அவர்களுடைய சாட்சிகள். சிலவேளை எங்களுடைய நினைவுகள் தேவனையும் மனிதர்களையும் குற்றப்படுத்தும்.

லாசருவைக் குறித்த தேவனுடைய மனநிலை. இவன் மரித்து அடக்கம் பண்ணப்பட வேண்டும். நான்காம் நாள் அவனை உயிரோடு எழுப்ப வேண்டும் என்பது. ஆனால் இவர்கள் சொன்னார்கள். நாங்களும் போய் மரிப்போம் என்று. இங்கு தேவனுடைய நினைவுக்கும் விசேஷமாக தோமாவின் நினைவுக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருந்தது. எனவே இன்னொரு மனிதனுடைய வாழ்க்கையில் தேவன் என்ன சித்தம் கொண்டு செயலாற்றுகிறாரோ, நாங்கள் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாமும் பலவேளைகளில் ஆண்டவர் இன்னொரு மனிதனுக்காக வைத்திருக்கிற சித்தத்தை கூட நாங்கள் தவறாக புரிந்து கொள்கிறோம். உலகத்தின் போக்கோடு இணைந்தால் தான் அது தேவனுடைய சித்தம் என நினைக்கின்றோம். ஒரு போதும் அப்படியிருக்கக் கூடாது. ஆண்டவர் என்னை நடத்துவது ஒரு வழி. உங்களை நடத்துவது இன்னொரு பாதையாக இருக்கலாம். ஆண்டவர் வழிநடத்துகிற வழிகள் வித்தியாசமாக இருக்கலாம்.

எலியாவை ஏன் காகம் கொண்டு போஷித்தீர்? கழுதையை ஏன் பேச வைத்தீர்? என்று ஆண்டவரைக் கேட்கலாமா? கர்த்தர் அதைச் செய்தார். அநேக குடும்பங்களில், சபைகளில் பிரச்சினை வருவதற்கு காரணம் தவறான நினைவுகள் தான். தேவனுடைய சித்தத்தை யாரும் தடை செய்யும் போது அங்கே பிசாசின் சித்தம் செயற்படத் தொடங்கும். நீங்கள் ஆண்டவருடைய பிள்ளை என்றால் தேவனிடம் ஆண்டவரே இந்த மனிதனைக் குறித்து நான் இப்படி நினைத்தேன் சரியா? தவறா? என்று கேளுங்கள். தேவனிடம் தான் அதைக் கேட்க வேண்டும். மாறாக நாம் நினைப்பதை வார்த்தையிலே கொட்டுகிற போது பிரச்சினை என்கிற அக்கினி பற்றி எரியும். நான் நினைக்கிறதை சொல்லுகிற போது, பெரிய குழப்பத்தை சபையிலும், குடும்பத்திலும் கொண்டு வந்துவிடும். மற்றவர்களுடைய உள்ளத்தை உடைக்கும், இன்னொரு மனிதனுடைய நற்பெயரைக் கெடுக்கும், பரிசுத்தத்தைப் பாதிக்கும். எனவே எங்களுடைய நினைவுகள் சரியாக இருக்க வேண்டும். எத்தனையோ குடும்பங்கள், ஊழியர்கள், ஊழியக்காரிகள், விசுவாசிகள் ஆண்டவரை அறிந்திருக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய ரீதியிலே மரித்திருக்கிறோம்.

## 2. எங்களுடைய சொந்த வாழ்வின் அழைப்பின் போது எப்படிப்பட்ட நோக்கத்தோடு தேவன் எங்களை அழைக்கிறார் என்பதை சரியாக நினைக்க வேண்டும்.

அநேகர் நினைப்பது, நாம் இயேசுவிடம் போனால் எங்களுடைய வாழ்க்கை எப்போதுமே செழிப்புத்தான், ஒரு போதும் மனவேதனை, துன்பம் வராது, எல்லாம் சந்தோஷம் தான். எங்கள் வாழ்க்கையில் துக்கம் இல்லை என்று இப்படியெல்லாம் நினைக்கிறோம். அழைக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். துன்பங்கள் மத்தியில் தான் தேவன் எங்களை அழைக்கிறார். ஆண்டவர் சொல்லியிருக்கிறார், பரலோகம் செல்கின்ற பாதை இடுக்கமும் நெருக்கமுமானது, கரடு முரடானது, பள்ளம் மேடானது. இயேசு சொன்னார், அழிவுக்குப் போகும் பாதை விசாலமானது. ஆனால் நித்திய ஜீவன் போகிற பாதை ஒடுக்கமானது. அதற்குள்ளே நெருக்கப்பட்டு, பள்ளத்திலே விழுந்து, மேட்டிலே ஏறி: மற்றவர்களுடைய சொற்கள் எல்லாம் எம்மை குத்தி: காயப்பட்டு, பாதங்கள் வைக்க இடமில்லாமல், பாதையெல்லாம் முட்கள் நிறைந்த பாதையினூடாகத் தான் பரலோகம்

செல்ல வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் அப்படியாக இருக்கிறீர்கள். எல்லாப்பக்கத்தாலும் வேதனை. **நம்பினவர்கள் கைவிட்டார்கள், என்னுடைய பிள்ளை இப்படிச் செய்யுமா என்ற ஏக்கம், நீங்கள் தளர்ந்து போக வேண்டாம்.** பரலோகத்தின் பாதை, அது முட்கள் நிறைந்தது. நீங்கள் நினைவிலே கொள்ளுங்கள், என்னுடைய ஆண்டவர் என்னைத் தெரிந்திருக்கிறார், அழைத்திருக்கிறார், தன்னுடைய இரத்தத்தினால் என்னைக் கழுவியிருக்கிறார். என்னை எந்தத் துன்பங்கள் சூழ்ந்து கொண்டாலும் தேவன் தன்னுடைய கரத்தினால் என்னைப் பிடித்து, அந்தப் பாடுகளுக்கூடாக என்னை நடத்திக் கொண்டு போகிறார்.

**யாத்திராகமம் 3:1 மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான்.** தன்னுடைய மாமாவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டு தேவனுடைய பர்வதம் மட்டும் வந்து விட்டான். **தேவன் எம்மை அறியாமலே தன்னுடைய நோக்கத்திற்குள்ளே கொண்டு வருவார்.** நீங்கள் ஆண்டவரை அறிய முதல் நினைத்திருக்கலாம் நான் படித்து ஒரு உத்தியோகத்திலே இருப்பேன் என்று. ஆனால் அது நடக்கவில்லை அல்லது பலவேளைகளில் அது கைகூடாமல் போய் விட்டது. நாம் சிறந்த ஞானம் படைத்தவர்களாக, மேதைகளாக அல்லது பாமரர்களாக இருக்கலாம். ஆனால் உங்களை அறியாமலே தேவனுடைய நோக்கத்திற்குள் தேவன் உங்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்.

ஆடு மேய்க்கிறது தான் வேலை. ஆனால் அவன் அறியாமலே தேவ பர்வதத்திற்கு கிட்ட வருகிறான். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டுவர முதல் தன்னுடைய ஊழியத்திற்கு தெரிந்தெடுக்கிற போது காண்பிக்கிற காட்சி **யாத்திராகமம் 3:2 அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்: முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது.** உன் அழைப்பிற்குள் முள்ளும், அக்கினியும் இருக்கிறது என்று காண்பிக்கிறார். முட்கள் நாங்கள் ஏற்றுக் கொள்கிற ஒன்றல்ல. முள் சாபத்திற்கு. எங்களுடைய வாழ்க்கையை வருத்துகிறதற்கு அடையாளம். அக்கினி பட்சிப்பதற்கு அடையாளம். மோசேயை அழைக்கிற போது சொன்னார், உனக்கு அக்கினியும், முள்ளும் இருக்கிறது. நீ கலங்கி போகாதே, நான் அதற்குள் உன்னோடு இருப்

பேன் என்று அழைக்கிற போது காண்பிக்கிறார். நீ செய்யப் போகிற காரியம் பாடுகளும், வேதனைகளும் நிறைந்தது. உன்னை ஊழியத்திற்காக அழைக்கிறேன், அது சந்தோஷமானது அல்ல, அது பாடுகள் நிறைந்த ஒன்று. ஆனால் அதற்குள் நான் இருக்கிறேன் என்றார்.

**உங்களை அழைத்த தேவன் நீங்கள் போகிற பாடுகளுக்குள்ளே உங்களோடு இருக்கிறார்.** நான் போகிற பாடுகள் மத்தியில் என்னோடு யார் வருவது, என்னுடைய வாழ்வு எப்போதுமே துன்பமாக உள்ளது. என்னுடைய வாழ்வு கண்ணீர் நிறைந்ததாகவே உள்ளது. என்னுடைய மனதின் நியாயமான ஏக்கம் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லையே. நான் விரும்பிய என்னுடைய ஆசைகள் நிறைவேற்றப்படவில்லையே. என்னுடைய சந்தோஷத்தின் நாளை எப்போது காண்பேன் என்று அழுகிற அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உங்களை அழைத்த ஆண்டவர் நீங்கள் போகிற பாடுகளுக்குள் அவர் உங்களோடு கூட இருக்கிறார். சோர்ந்து போகாதிருங்கள். எங்களுக்கு வருகிற நோவு, பாடு, துன்பம் மத்தியிலே நாங்கள் அனுபவிக்கிறதை விட தேவன் தான் அதற்குள் இருக்கிறார்.

**மோசே வெளியே நின்றான். தேவன் எரியும் முட்செடிக்கு உள்ளே இருந்து கூப்பிட்டார். துன்பம், முட்கள் மத்தியிலே தேவன் இருக்கிறார்.** எங்களுக்கு வரவேண்டிய பாடுகளை முதல் தேவன் அனுபவித்திருக்கிறார். நாங்கள் தாங்க வேண்டிய முள் முடி, ஈட்டிக் குத்து, அடிகளை அவர் எங்களுக்காக தாங்கினார். **உங்களுடைய பாடுகளுக்குள் நீங்கள் போக முதல் தேவன் போய் விட்டார்** இந்த நினைவு தேவனால் அழைக்கப்பட்ட எங்கள் ஒவ்வொருவருக்கும் எப்போதும் இருக்க வேண்டும். பின்பு தேவன் மோசேயை நோக்கி நீ எகிப்திற்கு போய் என்னுடைய மக்களை அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார். அதற்கு மோசே தான் திக்குவாய் என்று சொன்னான். அவனுடைய நினைவு என்னால் முடியாது, நான் **இதற்குரியவன் அல்ல. இதுதான் அவனுடைய நினைவு. ஆனால் மோசே தான் இதைச் செய்ய வேண்டும் என்பது தேவனுடைய நினைவு.**

**உங்களைத்தான் தேவன் நினைத்திருக்கிறார்.** எத்தனை பேர் அழைப்பின் சத்தம் கேட்டும் உங்களை அர்ப்பணிக்கவில்லை. உனக்கு வருகிற முட்கள் மத்தியில், அக்கினி போன்ற வேதனை மத்தியில் நான் இருப்பேன், நீ வா, என்னுடைய வழியில் நட, என்னுடைய வார்த்தையைக் கைக் கொள் என்று சொல்லி கர்த்தர் அழைத்தும் நாங்கள்

என்ன பதில் சொல்லுகிறோம். எத்தனை சிறந்தவர்கள் இருக்கி றார்கள், அவர்களைப் பார்த்துக் கொள்ளும், இதுவா எங்களு டைய நினைவு? இல்லை. உங்கள் ஒவ்வொருவரையும் தன்னுடைய அழைப்பிற்குள் இணைக்க ஆண்டவர் விருப்ப முள்ளவராக இருக்கிறார். என்னால் பரிசுத்தமாக வாழ முடியாது, நான் இந்த பாவத் திற்கு அடிமை, என்னிடம் தகுதியில்லை, நான் இப்படிப் பட்ட குறைபாடுள்ள மனிதன் என்று சொல்லி ஏதும் சாட்டு சொல்லி தடுக்க வேண்டாம். ஆண்டவர் உங்கள் மேல் நோக் கம் வைத்தால் உங்களைத் தான் அழைப்பார். அவரை விட்டு எங்கேயும் ஓட முடியாது. இந்த நினைவை எப்போதும் உங்கள் உள்ளத்தில் வைத்திருங்கள். மோசே அழைப்பை விட்டு ஓடுவது அவனது நினைவாக இருந்தது. ஆனால் தேவனின் நினைவு அவனால் முடியும் என்று.

## 3. தரிசனம், சொப்பனம் காண்கிற போது அது என்ன என்பதை சரியாக நினைக்க வேண்டும்.

பானபாத்திரக்காரனின் தலைவனும், சுயம்பாகிகளின் தலைவனும் குற்றம் செய்து, சிறையிலே போடப்பட்டார் கள். ஆனால் யோசேப்பு மாத்திரம் குற்றம் செய்யாமல் சிறையிலே போடப்பட்டான். பானபாத்திரக்காரன் ஒரு சொப் பனம் காண்கிறான். அதுதான் **ஆதியாகமம் 40:9-11 (9.) அப்பொ முது பானபத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத் திலே ஒரு திராட்ச்செடி எனக்கு முன்பாக இருக்கக்கண்டேன். 10. அந்தத் திராட்சச் செடியிலே மூன்று கொடிகள் இருந் தது: அது துளிர்க்கிறதாயிருந்தது: அதில் பூக்கள் மலர்ந்திருந்தது: அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந் தது. 11. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது: நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்திலே பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத் தேன் என்று, தன் சொப்பனத்தைச் சொன்னான்.** அதற்கு யோசேப்பு, ராஜா உன்னை மறுபடியும் உயர்த்தப் போகிறார், உன்னு டைய வேலையை மறுபடியும் உனக்குத் தரப்போகிறார் என்று சொன்ன போது, சுயம்பாகி களின் தலைவன் அதின் அர்த்தம் நன்றாக இருக்கிறது என்று கண்டு, தன்னுடைய கனவை யும் சொன்னான். **ஆதியாகமம் 40:16 - 17 (16) அர்த்தம் நன்றாயி ருக்கிறது என்று சுயம்பாகிகளின் தலைவன் கண்டு, யோசேப்பை நோக்கி: நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின்மேல் இருக்கக் கண்டேன். 17. மேற்கூடையிலே பார்வோனுக் காகச் சமைககப்பட்ட சகலவித**


**பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது: என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது என்றான்.** பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பு சொன்னது நன்றாக இருக்கிறது என்ற நினைவு வந்து விட்டது. சுயம்பாகிகளின் தலைவன் பானபாத்திரக்காரனின் சொப்பனத்துக்கு நல்ல அர்த்தம் சொல்லப்பட்டதைக் கண்ட போது நினைத்திருக்க வேண்டும் எனக்கும் நல்ல காரியம் நடக்கப் போகிறது என்று. ஆனால் அவனின் நினைவு தவறாகிவிட்டது.

மோசே கண்டது கூட ஒரு தரிசனம். அவன் முட்செடிககு கிட்டச் சென்ற போது ஆண்டவர் சொன்னார்: **"நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி, உன் பாதரட்சையைக் கழற்றிப் போடு"** என்றார். தரிசனம் கண்ட மோசேக்கு ஒரு கட்டளை கொடுக்கப்பட்டது: அதாவது **தரிசனம் காண்பதற்கும் ஆண்டவர் ஒரு தகமையை எதிர்பார்க்கின்றார்.** வெளிப்பாடுகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு தகமைகள் உண்டு. கர்த்தருடைய பரிசுத்த காரியங்களை அறிந்து கொள்கிறவர்கள் அதற்குரிய தகமையுடையவர்களாக இருக்க வேண்டும். **நாங்கள் காண்கின்ற தரிசனங்களும், சொப்பனங்களும் எங்களை மாற்ற வேண்டும். தூய்மைப்படுத்த வேண்டும்.** உன்னுடைய காலில் இருக்கின்ற பாதரட்சையைக் கழற்றிப் போடு என்றால் முதலாவது தரிசனம் காண்கின்ற மோசேயை ஆண்டவர் தூய்மைப்படுத்தினார். பல வேளைகளில் தரிசனம், கனவு கண்டவுடன் இந்தக் காரியம் இந்த நபருக்குரியது, அல்லது தேசத்திற்குரியது, அல்லது இது போதகருக்குரியது என்று சிந்திக்கின்றோம். ஆனால் மோசே தரிசனம் கண்டவுடன் இந்த தரிசனத்தின் தாற்ப்பரியம், ஆண்டவர் சொன்னார்: **உன்னை சுத்தமாக்க வேண்டும்.**

அதே போன்று யோசேப்பின் சம்பவத்தில் சுயம்பாகிகளின் தலைவன் கண்ட சொப்பனம் நன்றாக இருக்கின்றது என்று நினைத்தான். ஆனால் அந்த சொப்பனத்தின் தாக்கம் தனக்குரியது என்று சிந்திக்கவில்லை. நீங்கள் தரிசனம் அல்லது கனவு காண்கின்றவர்களாக இருக்கலாம். அவ்வாறு காண்பவற்றை முதலாவது எங்களுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். உங்களைத் தூய்மைப்படுத்தி, பரிசுத்தமாக்கி, நாம் மனந்திரும்பி ஆண்டவருக்கு பிரியமாய் வாழ்வதற்கே இந்த தரிசனங்களும், சொப்பனங்களும் என்று சிந்திக்க வேண்டும். எங்களுடைய நினைவுகள் தேவனுடைய நினை

விற்குள் - விருப்பத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டும். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற வண்ணமாய் எங்களுடைய நினைவுகள் மாற வேண்டும். ஆண்டவர் சொப்பனம், தரிசனம் தந்தால் இது என்ன ஆண்டவரே என்று கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். சிலவேளை தொல்லைகளின் திரட்சியினால் சொப்பனம் வரலாம். இன்னும் சிலவேளை உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை மாற்றுவதற்காய் கர்த்தர் சிலவற்றைக் காண்பிப்பார்.

நினைவுகள் இல்லாமல் ஒரு மனுஷனும் இல்லை. ஆனால் எங்களுடைய நினைவுகள் ஆண்டவருடைய ஏக்கத்தை நிறைவேற்றுகின்ற நினைவுகளாய் இருக்க வேண்டும். மற்றவர்களுடைய காயத்தை ஆற்றுகின்ற நினைவுகளாய் இருக்கட்டும். மற்றவர்களுடைய வாழ்வை கட்டுகின்ற நினைவுகளாய் இருக்கட்டும். தேவனுடைய அழைப்பின் சத்தத்திற்கு இசைந்து போகின்ற நினைவுகளாய் இருக்கட்டும். தேவன் காண்பிக்கின்ற காரியங்களோடு இணைந்து போகின்ற நினைவுகளாய் எங்களுடைய நினைவுகள் இருக்கட்டும். இப்படிப்பட்ட நினைவுகளாய் எம்முடைய நினைவுகள் காணப்பட்டால் கர்த்தருக்கு பிரியமாய் நம்முடைய வாழ்க்கையின் நடைமுறையை மாற்ற முடியும்.



# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற
விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும்
விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட) Subscription

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | S.L Rs 220.00 Per Year |
| இந்தியா (India) | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர்:-.......................................................................

விலாசம்:-....................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To:……………………………………………

……………………………………………

……………………………………………

……………………………………………

……………………………………………

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**